விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 191 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 13 புதன்கிழமை (28.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P. 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# பாகுபாடின்றி தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

எவ்விதமான பாகுபாடின்றி அனைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் மாத்திரமின்றி மலையகத்தில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளிகளான மலையக மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

அந்த தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் பொருளாதாரத்தை 15

# வடக்கு மாகாண சபைக்கு மேலதிகமாக அதிகாரங்கள்

## ஜனாதிபதி ரணில் உறுதி

- அரசியல் தீர்வு தொடர்பில் பரிசீலனை
- அதிகார பரவலாக்கம் குறித்து தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை.

ஐரோப்பிய விஜயத்தின் போது பிரான்ஸ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வு, 15

கடன் மறுசீரமைப்பு தொடர்பில்

# வங்கி வைப்பாளர்கள் இடையே அச்சம்

## பாதிப்பு இல்லை என ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் வங்கி வைப்பாளர்கள், பொதுமக்கள் இடையே கடும் அச்சம் நிலவுகின்றது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் வங்கி வைப்பாளர்களுக்கு 15

# அதிகளவான போதை நுகர்ந்த இளைஞன் மரணம்

## பண்டத்தரிப்பில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அளவுக்கு அதிகமான ஐஸ் போதையை நுகர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நெஞ்சு வலி காரணமாக குறித்த இளைஞன்சங்கானை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப் 15

# சித்திரவதையால் பாதிக்கப்பட்டோரின் நீதியை உறுதி செய்யுங்கள்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு அமைவாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும், அவர்கள் முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்திசெய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதை 15

யாழில் மோ.சைக்கிள்

# திருட்டுக்களுடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டுக்களுடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த கைது நடவடிக்கை 02

# வங்கிச் சட்டத்தில் திருத்தம் அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வங்கிச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

நிலையான பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் ஆற்றல்மிக்க மற்றும் நெகிழ்ச்சியான வங்கித்துறையைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தைக் கருத் 15

வெள்ளிக்கிழமை

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் 29ஆம் திகதி ஹஜ் பெருநாளை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அனை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி, ஞாயிறு தினங்களில் பாராளுமன்றை கூட்டலாம்

## விசேட வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

சனி, ஞாயிறு தினங்களில் பாராளு மன்றத்தின் விசேட அமர்வைக் கூட்டு வதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்தனவினால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 16 ஆம் நிலையியற் கட்டளைக்கு அமைய சபாநாயகர் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்தை கூட்டவுள்ளார்.

முன்னதாக உள்நாட்டு கடன் மறு சீரமைப்பு செயல்முறைக்கு ஒப்புதல் பெறுவதற்காக சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பாராளுமன்றம் கூட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## மஹா கும்பாபிஷேகம்

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் பெருங்கோவிலின் மகா கும்பாபிசேஷகம் இன்று பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

வளர்பிறை தசமியும் சித்த யோகமும் கூடிய காலை 9.26 மணிமுதல் 11.22 மணிவரையான சிங்க லக்கின சுப முகூர்த்த வேளைதனில் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கும் ஏனைய பரிவாரத் தெய்வங்களுக்கும் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இடம்றெவுள்ளது. (ம-7)

## திருட்டு...

யின் போது. திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பாழடைந்த கட்டடத்தில் மறைத்து விடப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 25ஆம் திகதி யாழ்ப் பாணம் சிவன் கோவிலில் வழிபடச் சென் றவர் வீதியோரமாக மோட்டார் சைக்கிளை தரித்துவிட்டுள்ளார். தலைக் கவசத்தையும் விட்டுச்சென்றுள் ளார்.

.வழிபாடு முடித்து வீடு திரும்ப முற்பட்ட போது. மோட்டார் சைக்கிளை காண வில்லை.இது தொடர் பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தில் உரிமையா ளரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணை களை மேற்கொ ண்ட யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸார் பண்ட தரிப்பை சேர் ந்த 42 வயதுடைய ஒரு வரை கைது செய்தனர்.

பாழடைந்த கட்ட டத்துக்குள் மறை த்து விடப்பட்டிருந்த திருடிய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப் பற்றினர்.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் மாந கரில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் பளை. கொடி காமம் பகுதிகளில் மோட்டார் சைக் கிள்கள் திருட்டுட னும் சந்தேக நப ருக்கு தொடர்புள் .ளமை விசாரணை களில் தெரியவந் தது. (ம-7,33,104)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16119)

**076 733 6047**
**076 755 8606, 076 911 9371**



# சரவணபவன் பென்சி கவுஸ்சின் சிறந்த ஆடித்தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள் ,பான்சி வகைகள், கிறீம் வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள்

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன் )

**021 315 5900**

(16118)



# ஓராண்டு நினைவுகளில்



அமரர்

**யோகதாஸ் அசோக்காந்**

(பிரதி அதிபர், யா/நாகர் கோவில் ம.வி)

திதி : பூர்வபட்ச தசமி (2023.06.28)

ஊர் போற்ற வாழ்ந்த உத்தமனே
பேர் சொல்லும் பிள்ளையாய் உதித்தவனே
அற்றார் அழி பசி தீர்த்தவனே
கற்றார் போற்ற வாழ்ந்திட்ட மன்னவனே
நொடியினில் நீ மறைந்து போனாய்
சென்றவழி தேடி நாம் அலைகின்றோம்
என்றெம்மை நாடி நீ வருவாயோ
உன் வரவுக்காய் ஏங்கி நிற்கும்

தோற்றம் 14.04.1980 மறைவு 08.07.2022

மனைவி : இந்திரா அசோக்காந்
மகள் : அஷ்விகா அசோக்காந் (C-6826)

"இந்திர பிரஸ்தம்" அல்வாய்.



# விற்பனை உடன்படிக்கையை இரத்து செய்தல்

பழைய பொலிஸ் நிலைய வீதி, ஆனைக்கோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைசிங்கம்-சிறீகாந்தன் (692850653V) மற்றும் சர்மிளா சிறீகாந்தன் (748504427V) ஆகிய நாங்கள் எங்களுக்குச் சொந்தமான வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை சேந்தான்குளம், கீரிமலையில் அமைந்துள்ள "சிறுவெளி வன்னியன் காடும் மறுபிரிவுகளும் (நிலப்பரப்பு 84) எனும் ஆதனத்தினை விற்பனை செய்வதற்காக இல.26/1 ஜீம்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்தை முகவரியாகக் கொண்டதுமான" கோல்டன் ரியல் எஸ்டேட் (Pvt) Ltd நிறுவனத்தினருடன் செய்து கொள்ளப்பட்ட விற்பனை உடன்படிக்கை ஆனது 21.06.2023 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். இக்காணி விற்பனை தொடர்பாக குறித்த நிறுவனத்தினருடன் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

துரைசிங்கம் சிறீகாந்தன்
சர்மிளா சிறீகாந்தன்

(C-6826)



# வாடகைக்கு

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு வீடு வாடகைக்கு தேவை. நெல்லியடியை அண்மித்த பகுதியில் விரும்பத்தக்கது.

(16112)

**077 070 5897**



இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

## கோயிலில் பணியாற்றக் கூடிய பணியாளர் தேவை

இந்துக்களாகவும் ஆசாரசீலராகவும் சமயப் பணிகளில் ஆர்வம் உள்ளவர்களாகவும் கணினி அறிவுடையவராகவும் உள்ள ஆண் பணியாளர் தேவை. தங்களின் தகைமைச் சான்றிதழ், குணநல சான்றிதழ் என்பவற்றுடன் நேரில் சமூகமளிக்கவும்.

செயலாளர் (C-6825)

**077 744 3735**



# பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lankan Tile Show Room இற்கு கீழ் குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை

- Show Room மனேஜர் சிங்களம்/ ஆங்கிலம் தெரிந்தவர் ஆண்
- விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- க/கு பதிவாளர் ஆண்/பெண்
- பணியாளர்கள்

தேவை. தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

குறிப்பு : 5 km சுற்றுளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(C-6824)

குரு காட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
**077 743 5265**



# கரைச்சி புளியம்பொக்கணை

## ஆலய வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆல யத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 30.06.2023 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்துக்கு. ஆலய தர்மகர்த்தாக்கள், அங்கத்த வர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சக்கணக்கான ஏழைகள்

# சமுர்த்தி கொடுப்பனவில் இருந்து நீக்கம்

## மக்களை பற்றி சிந்திக்காத அதிகாரத்தரப்பு



**(கொழும்பு) நாடெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான சமுர்த்தி பயனாளிகள் திட்டமிட்ட முறையில் சில அதிகாரத் தரப்பினரால் பெயர் நீக்கப்பட்டுள்ளமையினால் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்ரான் மகரூப் தெரிவித்தார்.**

அத்தோடு, "இது பெரும் அநீதி எனவும் மக்களை கஷ்டத்துக்குள் தள்ளிவிடும் இந்த மோசமான செயலை செய்தவர்கள் தொடர்பில் அரசாங்கம் கரிசனையின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நாடு முழுவதும் இலட்சக்கணக்கான ஏழை மக்கள் சமுர்த்திக் கொடுப்பனவு பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும், சில அதிகார பின்புலத்திலுள்ளவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இந்த பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

நாடு இன்று பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் அப்பாவி ஏழை மக்களும் வயிற்றுப் பசியை போக்க பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர். அவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு ஆறுதலாக இருந்தது.

மக்களை பற்றி சிந்திக்காத அதிகாரிகள் பலரும் இந்த அநியாயத்திற்கு துணை போயுள்ளனர். சமுர்த்திக் கொடுப்பனவு பெறுபவர்களே அரசாங்கத்தால் தற்போது வழங்கப்படும் ஒரு சில சலுகைகளை பெற தகுதியுள்ளவர்களாக கணிக்கப்படுகின்றனர்.

எனினும் கூடுதலான பயனாளிகளின் பெயரை நீக்கியமையால் அவர்கள் சலுகைகளை பெற்றுக் கொள்வது திட்டமிட்டு தடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக அதிகார தரப்பு அநியாயமாக பட்டினிப் போராட்டத்தை முடக்கிவிட்டுள்ளது.

இதனால், அந்த மக்களின் வறுமை நிலைமை மேலும் அதிகரிக்க அரசாங்கம் காரணமாக இருக்கின்றது. அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த கஷ்டங்களை பொறுத்துக்கொள்ள முடியாத நிலையிலேயே மக்கள் இன்று வீதிக்கு இறங்கி தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநியாயத்துக்கு எதிராக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் நியாயமான போராட்டத்திற்கு நாமும் வலுசேர்க்கவுள்ளோம். அத்தோடு, இவ்விடயத்தில் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளும் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் மேலும் தெரிவித்தார்.(நி-5)


2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். யசோதா திரவியம்

(திதி-வளர்பிறை தசமி -28.06.2023)

எங்கள் வாழ்வின் எழுச்சி கண்டு
உள்ளம் பூரித்து உவகை கண்டாய்
உன்னை மெழுகாய் உருக்கியே
எம்மைக் காத்து நின்றாய்
ஏழ் பிறப்பும் எம்மோடு இருப்பேன் என்று
அடிக்கொருமுறை கூறிடுவாய்-அம்மா
ஆண்டுகள் இரண்டாகி விட்டன. நீ ஓடி மறைந்து...
நீண்ட நெடுந்துயரில் நாம் இங்கு தவிக்கின்றோம்
வாராயோ அம்மா எம் வாசல் தேடி...

(1611)

குடும்பத்தினர்.

தோற்றம் : 31.05.1966
மறைவு : 20.06.2021

இல. 22, 2 ஆம் ஒழுங்கை
பலாலி வீதி, யாழ்ப்பாணம்

021 222 1704


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG), சபை நிதி

## வேலைத்திட்டம் - கட்டம் I - 2023

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்ட வணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016 (iii) ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016 (iv) இலக்க 2023.02.09ஆம் திகதி பொது நிதிச் சுற்றறிக்கை களுக்கு அமைவாக் வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டி ருப்போருக்கும் முன்னுரிமை யளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்த மான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டி ருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 5381) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களில் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 28.06.2023ந் திகதியிலிருந்து 11.07.2023ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப் படாத கட்டணமாக ரூபா. 2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல் ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 12.07.2023ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08) கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக் கப்படல் வேண்டும்.

09) கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2023.07.05ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளமுடியும்

10) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2023

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மாரீசன்கூடல் கடற்கரை வீதி புனரமைப்பு NP/14/41(16)/W/PSDG/2023/10 | 2.60 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 26,100.00 | 10.10.2023 |
| | சபை நிதி வேலைத்திட்டம் 2023 | | | | | | |
| 1 | i)கட்டுடை 20 வீட்டுத்திட்ட வீதி புனரமைப்பு,மானிப்பாய் மேற்கு ii)ஆனந்தா வைரவர் கோவில் வீதி புனரமைப்பு,மானிப்பாய் கிழக்கு தெற்கு NP/14/41(16)/W/CF/2023/11 | 3.25 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 32,600.00 | 10.10.2023 |
| 2 | i)மூண்ாமலை வீதி புனரமைப்பு,சுதுமலை தெற்கு ii)கூழாவடி 3ம் ஒழுங்கை,சாவற்கட்டு NP/14/41(16)/W/CF/2023/12 | 2.61 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 26,100.00 | 10.10.2023 |
| 3 | i) ஆனைக்கோட்டை 3ம் கட்டை ஒழுங்கை புனரமைப்பு,ஆனைக்கோட்டை ii) 3ம் கட்டை லூர்த்துநாயகி வீதி புனரமைப்பு,உயரப்புலம் NP/14/41(16)/W/CF/2023/13 | 2.99 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 30,000.00 | 10.10.2023 |
| 4 | i)சின்னப்பா வீதி 2ம் கிளை ஒழுங்கை புனரமைப்பு, நவாலி கிழக்கு ii)புலவர் வீதி 6ம் கிளை ஒழுங்கை (முதியோர் சங்கவீதி) நவாலி வடக்கு NP/14/41(16)/W/CF/2023/14 | 3.19 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 31,900.00 | 10.10.2023 |
| 5 | i)கம்மாலை வீதி 1ம்ஒழுங்கை புனரமைப்பு, சண்டிலிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/CF/2023/15 | 1.40 | 60 நாட்கள் | C9,and C8 (வீதி | 29.08.2023 | 14,100.00 | 26.09.2023 |
| 6 | i)பற்றிமா வீதி கிளை ஒழுங்கைகள்,பண்டத்தரிப்பு iii) சண்டிலிப்பாய் வீதி (அமிர்தலிங்கம் வீதி) 4ம் குறுக்குத்தெரு, பிரான்பற்று NP/14/41(16)/W/CF/2023/16 | 2.90 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 29,000.00 | 10.10.2023 |
| 7 | i) சென்யூட் சங்கக்கடை வீதி, இளவாலை ii) நாட்டாத்தி வீதி, மாதகல் கிழக்கு NP/14/41(16)/W/CF/2023/17 | 3.92 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 39,200..00 | 10.10.2023 |
| 8 | i)விஸ்வா மில் வீதி,மாகியப்பிட்டி ii)பெரியவிளான் உயரப்புலம் கிளை வீதி NP/14/41(16)/W/CF/2023/18 | 2.63 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 26,300.00 | 10.10.2023 |
| 9 | i) அரசடி வீதி 2ம் ஒழுங்கை, வடலியடைப்பு ii)சிறி அம்பாள் வீதி,சில்லாலை வடக்கு NP/14/41(16)/W/CF/2023/19 | 2.65 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 26,600.00 | 10.10.2023 |
| 10 | போதி மயானம் திருத்தம் NP/14/41(16)/W/CF/2023/20 | 0.63 | 45 நாட்கள் | C9, and C8 (கட்டடம்) | 29.08.2023 | 6,300.00 | 26.09.2023 |
| 11 | சாவற்கட்டு சந்தை திருத்தம் NP/14/41(16)/W/CF/2023/21 | 0.75 | 60 நாட்கள் | C9, and C8 (கட்டடம்) | 29.08.2023 | 7,500.00 | 26.09.2023 |

**தலைவர்,**
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(C-6830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப கிண்ணத் தொடர்

## இறுதிக்குள் அளவெட்டி மத்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தனது 10ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தி வருகின்ற 48 அணிகள் பங்கேற் கின்ற மாபெரும் துடுப்பாட்ட போட்டியில் முதலாவது அரையிறுதி போட்டியில் கல்வியங்காடு Baba Boys அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி அணி யினர் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்றத்தில் 2 இலக்கு களை இழந்து 104 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டதில் யசி 37 ஓட்டங்களை பெற்றார். ரசிக ரன் 26 ஓட்டங்களையும் டிலோசன் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பந்துவீச்சில் மது, வித்தகன் 1 இலக்கை வீழ்த்தினர். பதிலுக்கு 105 ஓட்டங்களை பெற்றால் வெற்றி பெற முடியும் என துடுப் பெடுத்தாடிய கல்வியங்காடு BabaBoys அணியினர் சியோத்தின் சிறந்த பந்து வீச்சு மூலமும் பிரபு, தீபனின் இறுதி நேர சிறப்பான பந்து வீச்சு மூலமும் இறுதி வரை விறு விறுப்பாக நடந்த போட்டி யில் வித்தகனின் இறுதி நேர போராட்டம் கை கொடுக்காமல் போக நிர் ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்றத்தில் 7 விக்கெட் இழந்து 96 ஓட்டங்களை கல்வியங்காடு BabaBoys அணியினர் பெற 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது அளவெட்டி மத்தி.

துடுப்பாட்டத்தில் வித்தகன் 31 ஓட்டங்களையும் மயூரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சியோத் 3 இலக்குகளையும் தீபன் மற்றும் பிரபு ஒவ்வொரு இலக்கினை வீழ்த்தினர். (4)

விண்வெளியில் அறிமுகப்படுத்தப்பட்ட

## உலகக் கிண்ண டிராபி



13ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் இந்தியாவில் நடை பெறுகின்றது. இந்தப் போட்டிகள் ஒக்டோபர் - நவம்பர் மாதங் களில் நடைபெறும்.

உலகக் கிண்ண கிரிக் கெட்டில் 10 நாடுகள் பங்கே ற்கின்றன. போட்டியை நடத்தும் இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்காளஷே், ஆப்கானிஸ்தான் ஆகிய 8 நாடுகள் நேரடியாக விளையாடுகின்றன. மீதமுள்ள அணிகளுக்கு தகுதிச்சுற்று ஆட்டம் நடைபெறும்.

இதில் வெற்றி பெறும் 2 அணிகள் உலகக் கிண்ணத்தில் விளையாடும். இந்த போட்டிக்கான அட்டவணை நேற்று வெளியாகியது.

இந்நிலையில் ஒருநாள் உலகக்கிண்ண போட்டியை பிரபலப்படுத்த ஐ.சி.சி புதிய முயற்சியை மேற்கொண்டு ள்ளது. அதாவது உலகக் கிண்ண டிராபியை பிரத்தியேக பலூனில் வைத்து பூமியில் இருந்து சுமார் 1.20 லட்சம் அடி உயரத்தில் வளி மண்டலத்தின் விளிம்பில் நிலை நிறுத்தப்பட்டது.

முதல்முறையாக விண்வெளியில் அறிமுகம் செய்யப்பட்ட கிண்ணம் என்ற பெருமையை ஐ.சி.சி ஒரு நாள் உலகக் கிண்ணம் பெற்றுள்ளது. (4)

## கடவுச்சீட்டிற்கான கட்டணங்களை குறைக்க திணைக்களம் திட்டம்

(கொழும்பு)

ஒருநாள் சேவையின் கீழ் பெறப்படும் கடவுச்சீட்டுக்கான கட்டணங்களை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு நாள் சேவை மூலம் கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கு 20,000 ரூபாய் கட்டணம் அறவிடப்படுகிறது.

எனினும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தின் மூலம் ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கும் நடைமுறையில் அதனை குறைக்க திட்டமிட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹவர் இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 15 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ், ஒன்லைன் மூலமாக விண்ணப்பிப்போர் வழமையான முறைமையின் கீழ், 14 நாட்களுக்குள் தமக்கான கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

விசேட சேவை மூலம் இதனை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பவர்கள், கொரியர் சேவை மூலம் மூன்று தினங்களில் இதனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹவர் இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். (நி-5)

## மகாவம்சம்: உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவிப்பு

(லண்டன்)


யுனெஸ்கோ "மஹாவம்சத்தை" உலக ஆவணப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது. மகாவம்சம் என்பது லக்தீவ மகா விகாரையின் வரலாறு மற்றும் ரஜரட்ட இராச்சியத்தின் வரலாறு பற்றி மஹாநாம தேரரால் பாலி மொழியில் எழுதப் பட்ட ஒரு வரலாற்றுக் கவிதையாகும். அது கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் கிபி 1815 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய தாக இயற்றப்பட்டது.

அதன்படி, யுனெஸ்கோவினால் 2023 இல் புதிதாக அறிவிக்கப்பட்ட 64 உலக சர்வதேச ஆவணப்பட மரபுச் சின்னங்களில் மகாவம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. (நி-5)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 04 . 1980

மறைவு 08 . 07 . 2022



அமரர். யோகதாஸ் அசோக்காந் B.A

(பிரதி அதிபர் யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்.)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்
போனாலும் எங்கள் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண்ணை விட்டு மறைந்த நீங்கள் விண்
நோக்கிச் சென்று ஓராண்டு சென்றாலும்
கண்ணை விட்டு மறையாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம்.

குறிப்பு- 28.06.2023 இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (சி-6822)

அம்பிகை, அல்வாய்.

குடும்பத்தினர். 077 201 3275, 077 184 4246.


### துறைசார் தொழிலில் ஈடுபடுவோர்

## வரிக்கோவையை ஆரம்பிக்குமாறு அரசாங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் முதல் துறைசார் தொழிலில் ஈடுபடும் அனைவரும் வரிக்கோவையை ஆரம்பிக்க வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வங்கியாளர்கள், நில அளவையாளர்கள், படவரைஞர்கள் அனைவரும் இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து தமக்கான வரி அடையாள இலக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மோட்டார் சைக்கிள், ஆட்டோ, லான்ட் மாஸ்ரர் தவிர்ந்த வாகனங்களை பிரதேச செயலகங்களில் பதிந்திருப்போரும் குறித்த வரி அடையாள இலக்கத்தைப் பெற வேண்டும்.

மாதாந்தம் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை ஊழியர் சேமலாப நிதியாக செலுத்துவோரும் வரி செலுத்துவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அசையாத சொத்துக்கள் கொள்வனவு, விற்பனைகளில் ஈடுபடுபவர்களும் உள்ளடக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## இராசிபலன்

28.06.2023
ஆனி 13, புதன்கிழமை
தசமி முன்னிரவு 11.51 மணிவரை

சித்திரை பிற்பகல் 1.09 மணிவரை
சுபநேரம் -4.25-5.55 மணிவரை
இராகுகாலம்-11.55-1.25 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூரட்டாதி. உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்** நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**துலாம்** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி கரமானதாக அமையும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**விருச்சிகம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி, பணியாளர் தொல்லை அகலும்.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** திடீர் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தில் சிறு சிறு வாக்குவாதம் ஏற்பட்டு விலகும், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேட்பதினால் ஞானம் வருகிறது. பேசுவதினால் வருத்தம் வருகிறது.

# இரத்த தானம் தொடர்பிலான விழிப்புணர்வு மக்களிடம் குறைவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள மக்களிடம் இரத்ததானம் தொடர்பிலான விழிப்புணர்வு குறைவாக காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண தாதிய பயிற்சி கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தானங்களிலே சிறந்த தானம் இரத்த தானம். உடல் பாகங்களை தானம் செய்வது, கண் தானம் செய்வது போன்ற பல்வேறு தானங்கள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இரத்த தானம் வழங்குவதில் தற்பொழுது முழுமையாக நாங்கள் வளர்ச்சி பெறாவிட்டாலும் முன்னேற்றம் உள்ளது. என்பது பலராலும் உணரப்பட்ட ஒரு விடயமாக காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் அதை முன்வந்து தானம் செய்ய வேண்டும் என்ற அந்த விழிப்புணர்வு எங்களைப் பொறுத்தவரை குறைவாக இருப்பது எல்லா இடங்களிலும் சுட்டிக் காட்டப்படுகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது.

இப்பொழுது பலர் அதற்கு ஆக்கமும் ஊக்கமளித்து தாங்களாக முன் வந்து இரத்த தானத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு செயற்படும் நபர்களுக்கு நாங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார். (4-30)



குருதிக் கொடையாளிகளையும் குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களையும் கௌரவிக்கும் விசேட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. 100 குருதிக் கொடையாளர்களுக்கும் 50 குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களுக்கும் இதன் போது கௌரவமளிக்கப்பட்டது.

(படம்- சிவசாந்தன்)

# மாசேரி குருநாதர் ஆலய பொங்கல் திருவிழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி-மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் ஆலயத்தின் பொங்கல் திருவிழா எதிர் வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பொங்கல் திருவிழாவிற்கான விளக்கு வைத்தல் பூஜையும், சனிக்கிழமை பொங்கலுக்கான தண்டல் பூஜை இடம்பெற்று ஊர்த்தண்டல் நிகழ்வும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை பண்டமரவடியில் இருந்து சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளுக்கு பண்டமெடுக்கப் புறப்படும் நிகழ்வும், மறுநாள் வெள்ளிக்கிழமை விசேட பூஜை வழிபாடுகளுடன் பண்டமரவடியில் இருந்து ஆலயத்திற்கு பண்டம் எடுத்துவரல் நிகழ்வும், மறுநாள் சனிக்கிழமை பொங்கல் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4-30)

# பாடசாலை மாணவனை மோதிய மோ.சைக்கிள்

## ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி- சங்கத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் பாடசாலை மாணவனை மோட்டார்சைக்கிள் மோதித்தள்ளியதில் மாணவன் தலையில் அடிபட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படடுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் விபத்தை ஏற்படுத்திய இளைஞனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-30)

# தென்மராட்சியில் நலன்புரி உதவித்திட்டம் கிடைக்காத மக்கள் மேன்முறையீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் அரசாங்கத்தின் நலன்புரி நன்மைகள் சபையின் உதவித்திட்டம் கிடைக்கத் தகுதி இருந்தும் திட்டத்திற்குள் உள்வாங்கப்படாத பொது மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் தமது மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை பதிவு செய்தனர்.

60 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சிப் பிரதேசத்தில் உதவித் திட்டம் கிடைக்கத் தகுதியிருந்தும் உதவித்திட்டம் கிடைக்காத பலரும் தமது மேன்முறையீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்ததுடன்- தகுதி இல்லாது திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்போர் தொடர்பான ஆட்சேபனைகளையும் தெரிவித்தனர்.

குறித்த தினத்தில் தென்மராட்சியின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பிரதேச செயலகத்தினை நாடி தமது மேன்முறையீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 45 ஆவது ஆண்டு பகிரங்கப் பொதுக் கூட்டம் எதிர் வரும் ஜூலை 3 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சட்ட நாதர் வீதியில் உள்ள இலங்கை இளம் கலைஞர் மன்றத்தில் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ. தவராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 15 ஆவது ஆண்டு குருபூசை

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 15 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 30 ஆம் திகதி காலை 9மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# உரக் கொள்வனவுக்கான வவுச்சரின் செல்லுபடிக் காலம் நீடிப்பு



(கொழும்பு)

பெரும்போக நடவடிக்கைகளுக்காக உரங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலத்தை டிசெம்பர் இறுதி வரை நீடிக்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவசாய சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வழங்கப்படும் வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் இரண்டு மாதங்கள் இருப்பதால், யூரியா மற்றும் இதர உரங்களை வாங்க விவசாயிகள் முயற்சித்து வருகின்றனர்.

இந்த உண்மையை கருத்தில் கொண்டு செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க தீர்மானித்துள்ளோம். எனவே தற்போது வழங்கப்படும் வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் இந்த வருடம் டிசெம்பர் இறுதி வரை நீடிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 600 | 750 | 700 | 800 |
| தக்காளி | 250 | 260 | 280 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 240 | 300 |
| கோவா | 300 | 250 | 280 | 300 |
| கரட் | 300 | 440 | 480 | 480 |
| பூசணி | 120 | 80 | 120 | 100 |
| புடோல் | 200 | 240 | 180 | 250 |
| வாழைக்காய் | 100 | 180 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 240 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 450 | 600 | 600 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 420 | 350 | 450 | 400 |
| கறிமிளகாய் | 350 | 450 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 700 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 160 | 160 | --- | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | --- | 800 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 200 | --- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு 500 மில்.டொலர்

(கொழும்பு)

500 மில்லியன் டொலர் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரவு -செலவுத் திட்டத்திற்குத் தேவையான நிதியை வழங்குவது தொடர்பில் இலங்கைக்கும் உலக வங்கிக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட உள்ளது.

உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் இணையத்தளத்தின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

700 மில்லியன் டொலர்களில் 200 மில்லியன் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ரொய்ட்டர்ஸ் இணையத் தளம் தெரிவித்திருந்தது. (நி-5)

# மத நல்லிணக்கம் தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமனம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

மத சுதந்திரத்தை பறித்தல் மற்றும் மத உண்மைகளை திரிபுபடுத்துதல் போன்றவற்றை ஆராய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

பௌத்த, முஸ்லிம், இந்து, கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், ஊடகங்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட குழுவை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் மத போதனைகளை அவதூறு செய்வதைத் தடுக்கவும் சட்ட விதிகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# வட்டி வீதங்களைக் குறைக்க வங்கிகள் தீர்மானம்

(கொழும்பு)

வர்த்தக வங்கிகள் தமது கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்களை குறைக்க தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கியின் நாணயச்சபை, கடன் மற்றும் வைப்பு கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்திருந்ததையடுத்து வங்கிகள் தமது வட்டி வீதங்களைக் குறைக்கும் என்ற எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் ஜூலை மாதம் 1 ஆம் திகதி முதல் கடனட்டை வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு பல்வேறு வர்த்தக வங்கிகள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## வடமாகாண மாணவர்களுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E (O/L) கா.பொ.த (சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு-2023

**வடமாகாண ஆளுநரின் முழு அனுமதி ஆலோசனையுடன் மேற்படி செயலமர்வு நடைபெறவுள்ளது.**

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 09.08.2023 புதன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | மு.ப. 8.30-பி.ப. 2.00 |
| 10.08.2023 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப. 8.30-பி.ப. 2.00 |
| 11.08.2023 வெள்ளி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண் பாடசாலை மாணவர்கள்) மட்டும் | மு.ப. 7.00-பி.ப. 2.00 |
| 12.08.2023 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப. 7.00-பி.ப. 2.00 |
| 13.08.2023 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (கலவன் பாடசாலை மாணவர்கள்) மட்டும் | மு.ப. 7.00-பி.ப. 2.00 |
| 14.08.2023 திங்கள் | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |
| 15.08.2023 செவ்வாய் | மாகாண தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி : (மாங்குளம்) | மு.ப. 8.30-பி.ப. 2.00 |
| 16.08.2023 புதன் | ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |
| 17.08.2023 வியாழன் | மன்னார் நகர சபை மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |
| 18.08.2023 வெள்ளி | வவுனியா நகர சபை மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

**"அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறவும்"**

**குறிப்பு:** மாணவர்கள் சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

**செயலமர்வின் அமைப்பாளர்கள்**

1. தலைவர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் -இலங்கை திரு.வே.தேவசேனாதிபதி (சிரேஷ்ட சட்டத்தரணி) LLB 077 113 3400
2. பொதுச்செயலாளர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம்-இலங்கை திரு.கந்தசாமி சக்திதரன் (மாகாண இணைப்பாளர் மாகாண தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி மாங்குளம்)- 077 070 3360
3. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்- வலயக்கல்வி அலுவலகம்) 077 314 4527
4. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசியலொத்தர் சபை 077 385 0841

(இ)

ஊடக அனுசரணை:- வலம்புரி



29.06.2023 வியாழன்
இசையரங்கு - திரு. க. வர்ஜிகன்
இசைப் பேரரங்கு
திரு. அபிஷேக் ரகுராம் (தமிழ்நாடு)


30.06.2023 வெள்ளி
இசையரங்கு - செல்வி லோ.சாய்லக்ஷ்மி
இசைப் பேரரங்கு
நெய்வேலி ஆர். சந்தானகோபாலன் (தமிழ்நாடு)


01.07.2023 சனி
இசையரங்கு- ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன்
இசைப் பேரரங்கு
ஸ்ரீமதி எஸ். சௌமியா (தமிழ்நாடு)


02.07.2023 ஞாயிறு
இசையரங்கு - செல்வி க.பரமேஸ்வரி
இசைப் பேரரங்கு
ஸ்ரீமதி அருணா சாய்ராம் (தமிழ்நாடு)

உ


அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும் "ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்"

இசைவேள்வி-௨௦௨௩

(யாழ்ப்பாணம்)

ஜீன் 29, 30, ஜீலை 1, 2 ஆகிய திகதிகளில்
நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் மாலை 5.00 மணிமுதல் நடைபெறும்.


திரு. க.வர்ஜிகன்



இசை ஆராதனை
02.07.2023 ஞாயிறு காலை 9.30 மணி


செல்வி லோ.சாய்லக்ஷ்மி

இந்நிகழ்வில் இந்திய இசைக்கலைஞர்களுடன்,
ஈழத்தின் பிரபலமான மங்கல இசைக்கலைஞர்களும், பாடகர்களும்,
அணி இசைக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.


ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன்



இசை ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

(தலைவர்) ஜெரூபன் (செயலாளர்) கி.கிருபானந்தா (பொருளாளர்)
- யாழ். கம்பன் கழகம் -
(C-6823)


செல்வி பரமேஸ்வரி கணேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 153

# செய்த தர்மம் என்றும் நம்மை ஏதாவது ஒரு ரூபத்தில் காக்கும்

இரக்க குண பெண்மணி ஒருத்தி

தினம் தோறும் இலையில் இரண்டு இட்லிகளை வைத்து யாரேனும் எடுத்துக் கொள்ளட்டும் என்று தினமும் வீட்டு சுற்றுச் சுவர் மேல் வைப்பாள்.

அவ்வழி திரியும் ஒரு கூனல் முதுகு கிழவன் அதை எடுத்துக் கொண்டு,

ஏதோ முனகிக் கொண்டே போவான். இது அன்றாட வழக்கமாயிற்று!. ஒரு நாள் மதில் அருகிலேயே நின்று, கிழவன் என்ன முணங்குகிறான் என்றுசெவிமடுத்து கேட்டாள். அவன் முனகியது, இதுதான். "நீ செஞ்ச பாவம் உங்கிட்டேயே இருக்கும்நீ செஞ்ச புண்ணியம் உன்னிடமே திரும்பும்."

தினந்தோறும் இதையே சொல்லிக் கொண்டு போனான். "தினமும் இட்லி வைக்கிறேன் எடுத்துட்டு போறான்"நீ மவராசி நல்லா இருக்கணும்" ன்னு கையெடுத்துக் கும்பிட்டு கை, கால்ல விழல்லைனாலும், "இட்லி நல்லா இருக்கு "ன்னு பாராட்டல்லனாலும் ரொம்ப நன்றி தாயே" ன்னு சொல்லக் கூடவா தோணல ஏதோ... "செஞ்ச பாவம் உங்கிட்டேயே இருக்கும் செஞ்ச புண்ணியம் உனக்கே திரும்பும்" ன்னுதினம் தினம் உளறிட்டுப் போறானே" என்று எண்ணி எண்ணி புலம்பினாள் அவள்.

"இவன் என்ன பித்தனா, இல்ல, சித்தனா, பரதேசி பய" என்று திட்டினாள். "நன்றி கெட்ட கூனனை" நினைத்து மன உளைச்சலுக்கு ஆளானாள்! நாளடைவில் அவளது கோபம் தலைக்கேறி, கொலை வெறியாக மாறியது! ஒருநாள் இட்லி மேல் விஷம் கலந்து செத்து தொலையட்டும் என

மதில் மேல் வைக்கப் போனாள். மனம் ஏனோ கலங்கியது கை நடுங்கியது. அவன் அப்படி இருந்தாலும், சே நாம் ஏன் இப்படியாகணும்னு

அந்த விஷம் கலந்த இட்லியை சாக்கடையில் எறிந்து விட்டு வேறு நல்ல இட்லியை மதில் மேல் வைத்து விட்டு மனம் அமைதியானாள்.

வழக்கம் போல் கூனக் கிழவன் வந்தான் இட்லியை எடுத்துக் கொண்டு, வழக்கம்போல,

"நீ செஞ்ச பாவம் உங்கிட்டேயே இருக்கும் நீ செஞ்ச புண்ணியம் உன்னிடமே திரும்பும்! "என்று சொல்லிக் கொண்டே சென்றான்! அவனை அப்படியே அறையலாம் போலிருந்தது, அந்த பெண்மணிக்கு!.

அன்று மதியம் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு, கதவைத் திறந்தாள்

வாசலில் வாலிபன் ஒருவன்கசங்கிய உடையோடு தள்ளாடிய படி நின்றிருந்தான். வேலையோடுதான் திரும்புவேன் என்று சொல்லி விட்டு ஒரு மாதம் முன்பு வேலை தேடி வீட்டை விட்டு சென்ற அவளது ஒரே மகன்தான் அவன்!.

"அம்மா, வீட்டுக்கு திரும்பி வரும் போதுஎன் பர்ஸ் காணாம போச்சு கையில காசு இல்ல தெரிஞ்சவங்க யாரும் கண்ணுல படல மணிக் கணக்கில நடந்து வந்துட்டே இருந்தேன் நல்ல வெயில் அகோரப் பசி வேறு மயங்கி விழுந்துட்டேன் கண் முழிச்சு பாத்தப்போ...யாரோ ஒரு கூனல் முதுகு கிழவன் என்னை தூக்கி உட்கார வச்சு ரெண்டு இட்லி கொடுத்து சாப்பிடச் சொன்னான்.

இட்லி சாப்பிட்ட பிறகுதான் எனக்கு உசுரே வந்தது!

இதைக் கேட்டதும், பேயறைந்தது போல் அதிர்ச்சி அடைந்தாள்! "விஷம் கலந்த இட்லியை கூனனுக்கு கொடுத்திருந்தால்...அது என் மகனுக்கே எமனாக ஆகியிருக்குமே, ஆண்டவா!"என்று நினைத்து தாய் உள்ளம் பதைபதைத்தது கண்கள் பனித்தன..

"நீ செஞ்ச பாவம் உங்கிட்டேயே இருக்கும்
நீ செஞ்ச புண்ணியம் உன்னிடமே திரும்பும் "

கூனன் முனகலின் பொருள் இப்போது நன்கு புரிந்தது!

உண்மைதான் எல்லாருக்கும் எல்லா நேரமும் புரிவதில்லை...புரியும் வேளையில் வாழ யாரும் இருப்பதும் இல்லை. வாழ்வில் தப்ப ஒரே வழி முகம் கோணாத தர்மமே.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# சீனாவின் உளவு பலூன் சுட்டு வீழ்த்தப்படும்

## ஜப்பான் எச்சரிக்கை

(டோக்கியோ)

சீனாவின் புதிய உளவு பலூன் நடவடிக்கைகள் ஜப்பான் மற்றும் தாய்வான் வான்பரப்பில் அவதானிக்கப்பட்டுள்ளன.

குறித்த பலூ ன்கள் தங்கள் எல்லையில் பறந்ததை ஜப்பான் உறுதி செய்துள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் அவற்றை சுட்டு வீழ்த்த தயாராக இருப்பதாகவும் ஜப்பான் குறிப்பிட்டுள்ளது.

பிபிசி செய்தி சேவை வெளிப்படுத்தியுள்ள ஆதாரங்களுக்கு சீனா இது வரையில் பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் சீனாவின் உளவு பலூன் அமெரிக்க கடற்கரையில் சுட்டு வீழ்த்தப்பட்டதால், அமெரிக்க-சீனா உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டது.

பின்னர் கடந்த ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் அமெரிக்காவின் வடமேற்கு பகுதியில்

காணப்பட்ட பலூன் வானிலை ஆய்வு போன்ற அறிவியல் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சீனா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தன்னைக் கடத்திச் செல்வதாக எண்ணி ஊபர் சாரதியைக் கொன்ற பெண்

(வோஷிங்டன்)

தன்னைக் கடத்திச் செல்வதாக எண்ணி ஊபர் சாரதி மீது பெண் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஃபோப் கோபா என்ற பெண் மீதே கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெண்டகியைச் சேர்ந்த குறித்த பெண் தனது காதலனைக் காண ஊபரில் பயணித்துள்ள நிலையில், டெக்ஸாஸின் எல்லை நகரமான எல் பாசோ பகுதியில் வைத்து தான் மெக்ஸிகோவுக்கு கடத்தப்படுவதாக எண்ணி அதன் சாரதியான டேனியல் பீட்ரா கார்சியா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இதில் சம்பவ இடத்திலேயே 52 வயதான குறித்த சாரதி உயிரிழந்துள்ளார் . இதனையடுத்து குறித்த காரானது தடுப்புச் சுவரில் மோதி நின்றுள்ளது. இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

# நூறு வயதில் காலமானார் நோபல் பரிசு வெற்றியாளர்



(வோஷிங்டன்)

லித்தியம்-அயன் மின்கலங்களை உருவாக்குவதில் முன்னோடியும் உலகின் வயதான நோபல் பரிசு வெற்றியாளருமான ஜான் குட் எனஃப் தனது 100 ஆவது வயதில் காலமானார்.

பொறியியல் பேராசிரியராக கடமையாற்றிய அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு இரசாயனவியலுக்கான நோபல் பரிசை கலாநிதி ஜான் குட் எனஃப் அவரது 97 ஆவது வயதில் வென்றார்.

லித்தியம் அயன் மின்கலங்களின் உருவாக்கம் உள்ளிட்ட மின்கலங்கள் தொடர்பான அவரது பணிகளுக்காக இந்த பரிசு வழங்கப்பட்டிருந்தது. (நி-5)

# 'அமெரிக்காவை...

## வடகொரி...

(பியாங்யாங்) அமெரிக்காவை அழிக்... போர் நடத்துவோம் என்... மக்கள் சூளுரைத்தனர்.

வடகொரியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலட்சக்கணக்கானோர் திரண்டு கொரிய போர் தொடங்கப்பட்டதன் 73ஆவது நினைவு நாளை அனுசரித்தனர். இதன்போதே அவர்கள் இந்த சூளுரையை விடுத்தனர்.

வடகொரிய அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில் 1,20,000 மக்கள், மாணவர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு செய்தி நிறுவனம் ...

# ரஷ்யாவில் முடிவுக்... வாக்னர் படை போரா...

(மொஸ்கோ)

உக்ரைன் ரஷ்யப் போரில் ஒரு திருப்பமாக ரஷ்யாவில் உள்ள தனியார் இராணுவ மற்றும் வாடகை படைக் குழுவின் தலைவர் எவ்ஜெனி பிரிகோசின் தலைமையில் நடைபெற்ற ஒரு ஆயுதமேந்திய கிளர்ச்சியானது தற்போது பேச்சு வார்த்தை மூலம் முடிவுக்கு வந்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் அவரால் கூறப்பட்டுள்ளதாவது, ரஷ்யா ...



# குறைகளை கொ... பட்டம் வென்ற நா...



(வோஷிங்டன்)


உலகிலேயே மிகவும் அவலட்சணமான நாயைத் தெரிவு செய்வதற்கான விநோத போட்டியொன்று அண்மையில் கலிஃபோர்னியாவில் நடைபெற்று ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...க்காவை அழிப்போம்; பழிவாங்கும் போர் நடத்துவோம்'
# ...காரியாவில் திரண்ட மக்கள் சூளுரை

**...வ அழிக்க பழிவாங்கும் ...வோம் என்று வடகொரிய ...ரத்தனர்.**






வெளியிட்ட புகைப்படத்தில் மக்கள் தங்களின் கைகளில் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களுடன் கூடிய பதாகைகளை வைத்திருப்பதை காட்சிப்படுத்தியது.

"ஒட்டுமொத்த அமெரிக்க நிலப் பரப்பும் எங்களின் துப்பாக்கிகளின் வீச்சுக்குள் இருக்கின்றது", "எதேச்சதிகார அமெரிக்கா அமைதியை அழிக்கும் தேசம்", "அமெரிக்காவை அழிக்க பழிவாங்கும் போரை நடத்துவோம்" போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை மக்கள் வைத்திருந்தனர்.

வடகொரியா விரைவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் முதல் உளவு செயற்கைக்கோளை ஏவ உள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை வாசகங்களை அந்நாடு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

மேலும், கே என்சிஏ ஊடகம், "அமெரிக்க ஏகாதிபத்தியர்களை அழிக்கும் வலிமையான ஆயுதங்கள் வடகொரியாவிடம் இருக்கின்றன. இந்த நாட்டைப் பாதுகாக்கத் துடிப்பவர்கள் எதிரியை பழிவாங்கும் நெருப்பை உள்ளத்தில் எரிய விட்டுக் கொண்டிருக்கின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளது. வடகொரியாவின் போர் நினைவுப் பேரணியும் அதில் எடுத்துக் கொள்ளப்பட்ட சூளுரையும் சர்வதேசத்தில் கவனம் பெற்றுள்ளது. (நி-5)

# ...முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போர்
## ...போராளிகளுக்கு நன்றி கூறிய புடின்



...வில் இரத்தம் சிந்துவதை தவிர்க்க இறங்கிய வாக்னர் வாடகை படைப் போராளிகள் மற்றும் தளபதிகளுக்கு நன்றி.

வாக்னர் போராளிகள் விரும்பினால் பெலாரஸுக்கு இடம் பெயர அனுமதிப்பதாகவோ அல்லது பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவோ அல்லது அவர்களது குடும்பங்களுக்குத் திரும்பவோ அனுமதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த அறிக்கையில் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய வாடகை படைத் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஜின் பற்றி அவர் குறிப்பிடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# புற்றுநோய் சிகிச்சைக்கான தடுப்பூசிகள் அடுத்த 5 ஆண்டுகளில் வெளிவரலாம்
## விஞ்ஞானிகள் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சியாட்டில் நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தேசிய புற்றுநோய் மையம், புற்றுநோய்க்கு தடுப்பூசிகள் உட்பட பிற நோய் எதிர்ப்பு சிகிச்சைகளை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் தடுப்பூசிக்கான ஆராய்ச்சி மிகப் பெரிய திருப்புமுனையை எட்டியுள்ளதாக அது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சியாட்டில் தேசிய புற்றுநோய் மையத்தின் மூத்த விஞ்ஞானியான வைத்தியர் ஜேம்ஸ் குல்லி தெரிவிக்கையில்,

"புற்றுநோய் சிகிச்சையில் அடுத்த பெரிய முன்னேற்றம் தடுப்பூசியாக இருக்கும். பல ஆண்டுகளாக வரையறுக்கப்பட்ட வெற்றிக்கு பிறகு, தடுப்பூசி சிகிச்சையை உருவாக்கும் ஆராய்ச்சியில் மிகப்பெரிய திருப்புமுனையை எட்டியுள்ளோம்.

அடுத்த 5 ஆண்டுகளில் புற்றுநோய் சிகிச்சைக்கான தடுப்பூசிகள் வெளிவரலாம். இவை நோயைத் தடுக்கும் பாரம்பரிய தடுப்பூசிகள் அல்ல. மாறாக புற்றுநோய் கட்டிகளை சுருக்கவும் புற்றுநோய் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவும் தடுப்பூசிகளாக இருக்கும்" என்றார். (நி-5)

# ...கொண்டாடும் விநோத போட்டி
## ...ற நாய்



...ள்ளது.

இப்போட்டியில் ஏராளமானோர் தாம் வளர்க்கும் நாயுடன் கலந்து கொண்டிருந்தனர். உடல் குறைபாடுகொண்ட நாய்களும் இப்போட்டியில் கலந்து கொண்ட நிலையில், உடலில் முடி இல்லாத Chinese Crested இனத்தைச் சேர்ந்த ஸ்கூட்டர் என்ற 7 வயது நாய் முதல் இடத்தைச் தட்டிச் சென்றது.


இந்த நாயானது குறைவான முடியுடன் காணப்படுவதுடன், பிறப்பிலேயே அதன் பின்னங் கால்கள் பின்னோக்கி இருந்துள்ளது.

இதன்காரணமாக ஸ்கூட்டரால் நடக்கவே முடியாது என்று கூறப்பட்டது.பின்னர் அதற்கு சிகிச்சை வழங்கப்பட்டு, தனிப்பட்ட கருவியின் உதவியால் இப்போது ஸ்கூட்டர் நடக்கிறது.

அனைத்து இன்னல்களையும் கடந்து விடாமுயற்சி என்றால் என்ன என்பதை ஸ்கூட்டர் உணர்த்தி இருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.இந்நிலையில் இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் அடுக்குமாடி கட்டடத்தில் பாரிய தீ

(அபுதாபி)



ஐக்கிய அரபு இராச்சியத்தின் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடமொன்றில் நேற்று முன்தினம் இரவு பாரிய தீ பரவியது.

துபாய்க்கு வடக்கிலுள்ள அஜ்மன் எமிரேட்ஸின் அல் ரஷ்தியாஹ் 3 பகுதியிலுள்ள அஜ்மன் வன் கொம்பிளெக்ஸ் கட்டடத்திலேயே தீ பரவியது.

அஜ்மான் பொலிஸாரும் சிவில் பாதுகாப்பு படையினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இக்கட்டடத்தில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டதாகவும் இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை எனவும் அஜ்மன் சிவில் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டிலும் இக்கட்டடத் தொகுதியில் தீ பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உத்தியோகத்தர்களும் குருதிக்கொடை வழங்க வேண்டும்

## யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

**அரச சேவையில் இணைந்துள்ள அரச உத்தியோகத்தர்கள் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என யாழ்.மாவட்ட செயலர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குருதி கொடையாளர்கள் கௌர விப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

அரச சேவையில் இணைந்துள்ள அரச உத்தியோகத்தர்கள் சமூகத்திற்கு நன்மைகளை செய்ய வேண்டும். அது குருதிக்கொடை வழங்குவதிலும் காணப்பட வேண்டும்.

ஏற்கனவே நான் கடமையாற்றிய திணைக்களங்கள் மற்றும் காரியாலயங்களில் அந்தந்த நலன்புரி அமைப்புகளில் ஊடாக இரத்ததான முகாம்களை கட்டாயமாக செய்ய வேண்டும் என அறிவுறுத்தி அந்த நடவடிக்கைக்கு அவர்களை உள்வாங்கும் நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தேன்.

தற்பொழுது நான் மாவட்ட செயலராக பதவி ஏற்ற பின் சகல பிரதேச செயலக பிரிவுகளுக்கும் அந்தந்த பிரிவுகளில் இரத்த தான முகாம்களை நடத்தி இரத்த தான முகாம்களை செயற்படுத்த வேண்டும் என்று கோரி இருக்கின்றேன் எனத் தெரிவித்தார். (4-33)



யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் 18 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு பிணை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவனை அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தாக்கி உள்ளார்.

காயம் அடைந்த மாணவனை பெற்றோர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு வழங்கினர்.


இந்நிலையில் குறித்த ஆசிரியரை கைது செய்த பொலிஸார் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (4-104)



யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் 200 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கோலாகலமான நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

இதன்போது மாணவிகள், பழைய மாணவிகள், அதிபர், ஆசிரியர்களின் துவிச்சக்கர வண்டி பவனி, வாகன பவனி, நடை பவனி என்பன இடம் பெற்றன.

இதன்போது நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் ஒன்றரை லட்சம் பெறுமதியான குளிர்பானங்களை பவனியில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கி உதவினர். குறித்த நிகழ்வு நாளை வரை இடம்பெறவுள்ளது. (படம்:- கஜிந்தன், மகாலிங்கம்)



அராலி மேற்கு நீளத்திக்காடு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான நிலையில் 7ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் வேட்டைத் திருவிழா இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

# கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கல்விக் கண் காட்சி இன்று 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் ந.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)



கோண்டாவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்றது.

# கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்களுக்கு நியாயமான தீர்வு வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர்களிடம் அதிகரித்த இடவாடகைக் கட்டணம் அறவிடப்படுவதாக, வர்த்தகர்களாலும் சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தினராலும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேழமாலிகிதன், கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் புவனேஸ்வரன், உப தலைவர் ஜெயக்குமார், உறுப்பினர் யேசுராஜன் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநரை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, புதிய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையிலான கட்டண அறவீட்டினால் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அதனைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உரிய திணைக்களங்களோடு கலந்துரையாடி கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்கள் பாதிக்கப்படாத வகையிலான தீர்வைப் பெற்றுத் தருவதாக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம். சாள்ஸ் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-33-316)

# வடமாகாண க.பொ.த சா/த மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண க.பொ.த சா/த மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் சிரேஷ்ட சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் ஒழுங்குபடுத்தலில் நடத்தப்படவுள்ளது.

அந்த வகையில் ஒகஸ்ட் 9 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வட்டுக் கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியிலும் 11 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.வீரசிங்க மண்டபத்திலும் (பெண்கள் மட்டும்) 12 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.வீரசிங்க மண்டபத்திலும் (ஆண்கள் மட்டும்) 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ்.வீரசிங்க மண்டபத்திலும் (கலவன் பாடசாலை மாணவர்கள்) 14 ஆம் திகதி காலை 8 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் 15 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பாடசாலை தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரி மாங்குளத்திலும் 16 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஊற்றங்கரை விநாயகர் கலை மண்டபத்திலும் 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்திலும் 18 ஆம் திகதி காலை 8 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலும் நடைபெறும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலியொய்டோசிஸ் என்னும் மண்காய்ச்சல்: அவதானம் தேவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம் •
யாழ்.பல்கலைக்கழகம்

**வாசகர்கள் எம்மினிய உறவுகளே!**

அலட்சியம் கூடாது. இதனை மண் காய்ச்சல் என அழைப்பதுடன் நாட்டின் பல பாகங்களில் இந்நோய் பரவி வருவதாக மருத்துவச் சங்கம் அறிவுறுத்தியிருக்கின்றது.

விழிப்பாக இருக்கும் வரைக்கும் எம்மை நாம் எந்த இடரிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ளலாம். வருகின்ற பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு தகுந்த நேரத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டால் அவற்றிலிருந்து அவர்களாகவே தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வாய்ப்பினை வழங்கும் அணுகுமுறையிது.

மருந்து கிடைப்பதில் தட்டுப்பாட்டுடன் விலைகளும் அதிகரித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் வருமுன் காக்கும் செயன்முறையாக வலம்புரியினூடாக மக்களுக்கான அறிவு ரீதியான செய்திகளை தருவதன் மூலம் எமது மக்களைக் காப்பாற்றும் முன்னகர்வாக இக்கட்டுரை அமைகின்றது.

அழுக்கு மண்ணிலிருந்தும் நீரிலிருந்தும் தொற்றி உயிரைக் காவு கொள்ளும் நோய் பற்றி அறியலாம் வாரீர். வருமுன் காப்பது என்பதனை மீண்டும் நினைவிலிருத்தும் நோயைப் பற்றிய அவசிய தகவல் இது.

இந்நோயானது மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டம், வடமேல் மாகாணத்தின் புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் மக்களிடையே பரவலாகப் பதிவாகியிருக்கின்றது.


இந்த நோய் மனிதர்களில் உயிரிழப்பை ஏற்படுத்தும் அளவுக்கு பாரதூரமானது ஆகும். குறிப்பாக அழுக்கு மண்ணிலிருந்தும் நீரிலிருந்தும் தொற்று ஏற்படுவதனால் விவசாயச் செய்கையில் ஈடுபடும் உழவர் பெருமக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் எனவும் வலியுறுத்தப்படுகின்றது,

நோய் முற்றுதலடையும் நிலைவரும்போது நியுமோனியா மற்றும் இறுதியில் இறப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது. இந்நோய் தொற்றுதலாகி பெருக்கமடைவதற்கு சராசரியாக 9 நாட்கள் தேவைப்படுகின்றன.

இருப்பினும் 24 மணித்தியாலங்களுக்குள்ளேயே இதனது தொற்றுதலுக்கான அறிகுறிகளை அவதானிக்கலாம்.

மிலியோய்டோசிஸ் எனப்படுவது ஒரு தொற்று நோயாகும். மனிதருக்கும் விலங்குகளுக்கும் தொற்றுதல் ஏற்படுத்தக் கூடியது. இது ஒருவகையான (Gram negative) பேர்கொல்டேறியா சூடோமலெய் (Burkholderia pseudomallei) (முன்னதாக சூடோமோனசு சூடோமலெய் என அறியப்பட்டது) எனப்படும் மண், நீர் மற்றும் தாவரங்களில் காணப்படும் ஒருவகை பக்ரீறியாவினால் ஏற்படுத்தப்படுகின்றது. கடினமாக சூழலிலும் வாழக்கூடிய இப்பக்ரீறியா மாறுபட்ட கார அமிலத் தன்மையுடைய ஊடகத்திலும் தப்பிப் பிழைக்க வல்லது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




இது வடகிழக்கு ஆசியா, ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை, சீனா, மத்திய கிழக்கு நாடுகள், பப்பாநியூகினியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அதிகமாக காணப்படுவதாக அறியப்படுகின்றது. குறிப்பாக சுற்றுலாப் பயணிகள், உழவர் பெருமக்கள், படைவீரர்கள், கட்டுமான தொழிலில் ஈடுபடுவோர், அதிகளவில் குடிப்பழக்கம் உடையவர்கள், மற்றும் தொற்றுதலாகியுள்ள அழுக்கு மண்ணில் தொடுகையை ஏற்படுத்துபவர்களுக்கு குறிப்பாக தோல் அழற்சியுடையவர்கள், நீரிழிவு நோயாளிகள், எரிதல் மற்றும் சுவாச குறைபாடு உடையவர்களுக்கு இந்நோய் விரைந்து தொற்றுதலாகும்.

ஏனையோர் இந்நோயின் குணங்குறிகள் வேறுபட்டதாக இருந்தாலும் பொதுவான குணங்குறிகளை வைத்து மருத்துவரை நாடுவது சிறந்தது என குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உலகளவில் வருடத்துக்கு 165,000 தொற்றாளர்களை அடையாளப்படுத்தியிருந்தாலும் 89,000 பேர் இந்த நோயினால் இறந்திருப்பதாக த்கவல்கள் தெரிவிக்கின்றன.

காசநோய் (Tuberculosis) மற்றும் நுரையீரல் அழற்சி (pneumonia) போன்ற நோய்களைப் போன்று இருந்தாலும் அவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டதென அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நோயின் அறிகுறிகளாக நோவுடனான வீக்கம், காய்ச்சல், இருமல், சில வேளைகளில் அதிகரித்த காய்ச்சல், தலையிடி, சுவாசிப்பதில் இடர்பாடு என விரிந்து செல்கின்றது. தேகாரோக்கியமான மனிதர்களிலும் நோயை உண்டாக்கும் தன்மையுடையதான இந்த பக்ரீறியா, நீரிழிவு, கல்லீரல் நோயுடையவர்கள், சுவாசப்பை நோயுடையவர்கள், புற்றுநோயாளிகள் மற்றும் பல்வேறு காரணங்களால் ஏற்படும் நோயெதிர்ப்பு தன்மை குறைவானவர்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த பக்ரீறியாவை இனங்காண இரத்தம், மலம், சலம், மற்றும் சளி போன்றவற்றின் மாதிரிகள் பரிசோதிக்கப்படும்.

தற்போதைய மழையுடன் கூடிய காலநிலையுடன் நீர் மற்றும் மண்ணின் ஊடாக பரவும் பக்ரீறியாவினால் ஏற்படும் மிலியோய்டோசிஸ் என்னும் மண் காய்ச்சல் பரவி வருகின்றது.

பாதங்களில் ஏற்படும் காயங்கள், அழுக்கு நீரைக் குடித்தல் அழுக்கு மண்ணில் தொடுகை ஏற்படுத்தல் ஊடாக இந்த பக்ரீறியாக்கள் மனிதனுக்கு தொற்றுவதாக அறிவித்துள்ளனர்.

எந்த வயதினரையும் இந்நோய் தாக்கும் தன்மை வாய்ந்ததாக இருப்பினும் 40 இலிருந்து 60 வயது வரையானவர்களில் அதிகமாக காணப்படுவதாக அறியப்படுகின்றது.

மிலியோய் டோசிஸ் நோயேற்படுவதற்கு நோயியலில் அவதானிக்கப்படும் மூன்று காரணிகள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

நோயெதிர்ப்பு சக்தி குறைந்த உடல் தேகாரோக்கிய மற்ற மனிதர்கள் (susceptible host), ஏற்புடையதான சூழல் (favourable environment) மற்றும் வீரியமான நோயாக்கியான பக்ரீறியா நுண்ணங்கி (virulent pathogen).

இவை மூன்றும் ஒருங்கமைந்தால் நோயேற்படுதலை தவிர்க்க முடியாது. ஆதலினால் இந்நோயை முகாமைப்படுத்துவதில் முன்னேற்பாடான நடவடிக்கையாக (preventive) தேகாரோக்கியமான உடலை வைத்திருப்பது, மாசான சூழலை தவிர்த்தல் மற்றும் வீரியமான பக்ரீறியாவை பரவ விடாது தடுத்தல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

இதனை நோய் முக்கோணம் (disease triangle) என அழைத்தாலும் இம்மூன்று காரணிகளையும் அவதானித்து நோய்க்கு அனுசரணையான மற்றும் ஆதாரமான விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் முக்கியமான அணுகுமுறையாகும்.

கொவிட் -19 வந்தபோது நாம் எம்மை நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் முன்னேற்பாடாக நடவடிக்கைகளை அனைவரும் இணைந்து செய்ததினால் எமது தேசத்தில் இந்நோயின் தாக்கத்தையும் பரவலையும் மிகவும் நேர்த்தியாக குறைக்கக் கூடியதாயிருந்தது.

மனிதர்களிடமிருந்தோ அல்லது மிருகங்களிடமிருந்தோ நேரடியாக தொற்றுதலேற்படும் வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகக் காணப்பட்டாலும் தோல், உண்ணுதல் மற்றும் உட்சுவாசத்தினால் இந்நோய் அதிகரிக்கும் அல்லது பரவும் வாய்ப்பு அதிகமாகும். மழைகாலங்களில் குறிப்பாக பருவமழை காலங்களில் அதிகமாக தொற்றுதல் ஏற்படுகின்றது.

மேற்கூறிய குணங்குறிகள் மற்றும் மனிதரில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தால் அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது அவசியமாகும். அலட்சியமாக இருந்து காலங்கடந்தால் உயிரிழப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

215





காட்டுத் தீயை மறந்தார்கள். எதற்காக மலை உச்சியில் ஏறினோம் என்பதையும் மறந்தார்கள். பசி தாகங்களை அடியோடு மறந்தார்கள். இத்தனை காலமும் தாங்கள் உயிர் வாழ்ந்த தெல்லாம் இந்த ஒரு சந்திப்புக்காகவே என்பதை உள்ளுணர்வினால் அறிந்தார்கள். தங்களைக் கவர்ந்திழுத்த இனந் தெரியாத சக்தி இதுதான் என்பதையும் தெரிந்து கொண்டார்கள். தங்களில் ஒருவரிடம் உள்ள குறையை இன்னொருவரால் இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை அறிந்தார்கள். இவ்விதம் ஒன்று சேர்ந்து விட்டவர்களை இனிப் பிரிக்கக் கூடிய சக்தி உலகில் வேறொன்றும் கிடையாது என்பதையும் உறுதியாக உணர்ந்தார்கள்.

இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த படைப்புக் கடவுளான பிரம்மதேவர் தாம் ஆரம்பித்த வேலை நல்ல முறையில் தொடங்கி விட்டது என்பதை அறிந்து பரிபூரணத் திருப்தி அடைந்தார்!

மேற்கூறிய ஆதி மனிதனையும் ஆதி ஸ்திரீயையும் ஒத்திருந்தார்கள் அந்த நேரத்தில் நம் வல்லவரையனும் குந்தவைதேவியும்.

இப்பூவுலகில் தாங்கள் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த நிமிஷத்துக்காகவே, - இந்தச் சந்திப்புக்காகவே, என்பதை அவர்களுடைய உள்ளுணர்ச்சி உணர்த்தியது. ஆனால் ஆதி மனிதனையும் ஆதி ஸ்திரீயையும் போலின்றி இவர்கள் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அல்லவா? ஆகையால் தங்களுடைய பரஸ்பர அந்தஸ்தில் இருந்த வேற்றுமையை அவர்களால் மறக்க முடியவில்லை. முழுதும் உணர்ச்சி வசப்பட்டு மனத்தைக் கட்டுக்கடங்காமல் அவர்கள் விட்டுவிடவில்லை. ஒரு கணம் ஒருவரையொருவர் பார்த்துக் கண்ணோடு கண் சேர்வதும், அடுத்த கணத்தில் தங்கள் கண்களைத் திருப்பி அக்கம் பக்கத்திலிருந்த பூ, மரம், பட்டுப் பூச்சி, ஓடை முதலியவற்றைப் பார்ப்பதுமாயிருந்தார்கள்.

ஈசான சிவபட்டர் தொண்டையைக் கனைத்த பிறகு தான் இருவரும் ஏதோ ஒரு முக்கியமான காரியம் பற்றி இங்கே சந்திக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டார்கள்.

"நீர் என்னைத் தனிமையில் பார்க்க வேண்டுமென்று ஈசான பட்டரிடம் தெரிவித்தது உண்மையா?" என்று குரலைக் கடுமைப்படுத்திக் கொண்டு இளையபிராட்டி வினவினாள்.

அந்தக் குரலின் கடுமையும் அதிகார தோரணையும் வந்தியத்தேவனை நிமிர்ந்து நிற்கச் செய்தன.

"தாங்கள் யார் என்று தெரிந்தால் அல்லவா தங்களது கேள்விக்கு விடை சொல்லலாம்? ஈசான பட்டர் என்னைத் தவறான இடத்துக்கு அழைத்து வந்து விட்டாரோ என்று ஐயுறுகிறேன்!" என்றான் அந்த வீர வாலிபன்.

"எனக்கும் அவ்வித சந்தேகம் உண்டாகிறது. நீர் யாரைப் பார்க்க விரும்பினீர்?"

"சோழர் தொல்குலத்தின் மங்காமணி விளக்கை, சுந்தர சோழ மன்னரின் செல்வத் திருமகளை, ஆதித்த கரிகாலருக்குப் பின் பிறந்த சகோதரியை, அருள்மொழி வர்மரின் அருமைத் தமக்கையை, இளையபிராட்டி குந்தவை தேவியைப் பார்க்க வேண்டுமென்று ஈசான சிவ பட்டரிடம் சொன்னேன்."

குந்தவைப் பிராட்டி புன்னகை பூத்து, "அவ்வளவு பெருமையையும் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டிருப்பவள் நான் தான்!" என்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குள்ள ராஜா

மங்களபுரம் என்ற ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரியும் இருந்தார். ராஜாவோட உயரம் நாலரை அடிதான். ஆனா அமைச்சரோ ஆறடி உயரம் இருந்தார்.

ராஜா குள்ளமா இருந்தாலும் அது பற்றி கவலையில்லாமல் இருந்தார். அவர் விருப்பத்திற்கேற்ப மந்திரி நடந்தார். ஒரு முறை ராஜாவும் மந்திரியும் மாறுவேஷத்துல நகர்வலம் போனார்கள்.

அப்போது ஒரு வீட்டில் ஒரு அப்பா, தன் பையனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். "நல்லா குதிச்சு உயரமா ஆகுற வழியை பாரு. இல்லேன்னா நம்ம ராஜா போல குள்ளமா ஆயிடுவே" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் ராஜாவுக்கு கடுங் கோபம் வந்தது.

மாறுவேஷத்தை யாருக்கும் காட்டிக் கொடுக்கவும் விரும்பவில்லை.



இருவரும் விடுவிடு வென்று அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அன்றைக்கு முழுவதும் ராஜா கோபமாகவே இருந்தார்.

மறுநாள் காலை ஊர் முழுக்க தண்டோரா போடச்சொன்னார் ராஜா. "இதனால் சகல மக்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், நாலரை அடி உயரத்துக்கு மேல ஊருல ஆம்பளைங்க யாரெல்லாம் இருக்காங்களோ, அவங்க எல்லோரும் உடனடியாக 'ஊரைவிட்டு வெளியேறணும்" என்று அறிவிப்பு வெளியிட்டார் ராஜா. அதனால் ஊருல இருந்த எல்லா பெரியவங்களும் உடனடியா காலி பண்ணிட்டாங்க.

மந்திரி ஆறு உயரம் இருந்தாலும் மந்திரி மட்டும் காலி பண்ணாம இருந்தார். ஆனால், ராஜா பார்த்தால் திட்டுவாரேன்னு மறைந்து வாழ்ந்து வந்தார்.

எல்லா பெரியவங்களும் [illegible] ஒற்றர்களாகவும் அமைச்சர்களாகவும் ராஜா நியமிச்சார். ஆனால் வீரர்களாக இருக்க உயரமும் வேணுமே ?

அதனால வீரர்கள் மட்டும் கிடைக்கவே இல்லை.

இதெல்லாம் ராஜாவை எப்போ கவிழ்க்கலாம் என்று காத்துக் கொண்டிருந்த எதிரி நாட்டு ராஜாவுக்கு தெரிந்தது.

அதனால மங்களபுரம் மேல போர் தொடுக்கப் போவதாக அறிவிப்பு தந்தார். அத்துடன், தனது வீரர்களோடு ஊரையும் முற்றுகையிட்டார்.

மங்களபுரத்தில் வீரர்கள் இல்லாததால் ராஜாவுக்கு ஒரே கவலை. இந்த நேரத்தில் ராஜாவின் முன்னால் மந்திரி அரண்மனைக்கு வந்தார்.

மந்திரியைப் பார்த்ததும் ராஜாவுக்கு சந்தோஷம். ஆனா, வெளியில அதை காட்டிக்காமல் கோபமாக பேசினார். "இப்ப ஏன் இங்க வந்தே ?" என்று கேட்டார். "மன்னரே , என் கால் ரெண்டையும் பாருங்க.

நான் குள்ளமா இருக்கணும்கிறதால அப்படியே வெட்டிக் கொண்டேன்" என்றார் அமைச்சர்.

ராஜா அப்போது தான் அமைச்சரின் காலைப் பார்த்தார். கால் குண்டா இருந்தது. ஆனால், கால் முழங்காலை மடிச்சுச் சின்னதா இருப்பது போல காண்பித்திருந்தார் அமைச்சர்.

ராஜாவுக்குப் புரிந்தது. அமைச்சரின் நகைச்சுவையை ரசித்தார். உடனே வேலையில் சேரும்படி அமைச்சருக்கு ராஜா உத்தரவிட்டார். உடனடியாகக் களத்தில் இறங்கிய அமைச்சர், மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

குள்ளமான சிறுவர்களை எதிரி நாட்டு ஒற்றர்களுக்கு சந்தேகம் வராமல் வெளியே செல்வதற்குப் பயிற்சியளித்தார். அவர்கள் மூலம் ஊரைக் காலி செய்து விட்டுப் போன வீரர்களுக்கு தகவல் கொடுத்தார்.

வீரர்கள் எல்லோரும் பின்புறமாக அரண்மனையில் குவிந்தனர்.

அனைவரும் ஒன்று சேர் ந்து எதிரி நாட்டு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி னார்கள்.

அதை தாங்க முடியாமல் எதிரி நாட்டுப் படையினர் ஓட்டம் பிடித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு விஷயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விஷயத்தில் தொடருவான் !

– இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவச் செல்வங்களை வதைத்து மனிதர்களை உருவாக்கும் விந்தை

அவுஸ்திரேலிய நாட்டில் வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களுக்கு பாடம் சார்ந்த வீட்டு வேலைகள் (Home Work) வழங்குவது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் அந்த மாணவர்கள் எந்தவித நெருக்கீடுகளும் இல்லாமல், சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே அவ்வாறானதொரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் எங்கள் நாட்டில் வெள்ளிக்கிழமைகளில்தான் மாணவர்களுக்கு பாடம் சார்ந்த வீட்டு வேலைகள் அள்ளிக் கொடுக்கப்படும்.

யாரேனும் ஆசிரியர் வெள்ளிக்கிழமைகளில் வீட்டு வேலை கொடுக்கவில்லை என்றால், நம் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியரை விமர்சிக்கத் தலைப்பட்டுவிடுவர்.

அதேநேரம் பாடசாலையில் வெள்ளிக்கிழமை அனைத்து ஆசிரியர்களாலும் வழங்கப்பட்ட வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற நினைப்பு, நம் பிள்ளைகளை நிம்மதியாக உறங்கக்கூட விடுவதில்லை.

தவிர, வீட்டு வேலை செய்ய வேண்டும் என்ற ஏக்கமும் பதற்றமும் பதகளிப்பும் சேர்ந்து சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களை நாசம் செய்து விடுகின்றன.

சிலவேளைகளில் வீட்டு வேலைச் சுமையும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க முடியாத நிலைமையும் சேர்ந்து திங்கட்கிழமையில் பாடசாலைக்குச் செல்லாமல் தவிர்க்கின்றதான சூழ்நிலையையும் ஏற்படுத்திவிடுகின்றது.

இவ்வாறான சூழமைவு காரணமாகவே எங்கள் பிள்ளைகள் தவறான பாதையில் பயணிக்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமையில் மாலை நேரத்திலும் ஞாயிற்றுக்கிழமையில் முழுமையாகவும் தனியார் வகுப்புக்களை நிறுத்துவதெனவும் இதனை தரம் 9க்கும் அதற்குக் கீழான வகுப்புக்களிலும் அமுல்படுத்துவதெனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடந்த கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் மிகவும் வரவேற்கப்பட வேண்டும்.

இவ்வாறு தனியார் வகுப்புக்களை வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் நிறுத்துவதன் மூலம் மாணவர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதற்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெற்றோர்களுடன் கூடியிருந்து உண்டு மகிழ்ந்து உறவுகளின் வீடுகளுக்குச் சென்று நட்புப் பாராட்டி சமூகமயமாக்கலில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

எனினும் இந்த நன் முயற்சிக்கும் எதிரான கருத்துக்கள் இருக்கின்றன எனும்போது தான் இதயம் நொந்து கொள்கிறது.

அந்தோ! கொடுமை. பல்கலைக்கழகம் சென்ற எங்கள் பிள்ளைகள்கூட, வாழ முடியாமல், தங்களை அழிக்கத் தலைப்படுகின்ற கொடுமை நடக்கிறதே இது ஏன் என்று ஆராய வேண்டாமா?

ஆம், தனித்து படி... படி... என்று பெற்றோர் கொடுக்கின்ற அழுத்தம் மாணவர்களை மனநோய்க்கு ஆளாக்குமேயன்றி மனிதர்களாக ஆக்காது.

ஆகையால், யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் எடுத்த தீர்மானத்தை தயவுசெய்து அமுலாக்குங்கள். அது நிச்சயம் எங்கள் மாணவர்களை மனிதர்களாக வாழ வைக்கும்.

## ‘எனக்கு தமிழ் தெரியும் தமிழில் பேசுங்கள்’

### பிரான்ஸ் தமிழருக்கு ரணில் சொன்ன பதில்

(பாரிஸ்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரான்சில் நடத்திய சந்திப்பின் போது,தமிழர் ஒருவர் ஆங்கிலத்தில் எழுப்பிய கேள்வி புரியவில்லையென்றும் அவரை தமிழில் கேள்வியெழுப்புமாறும் தனக்கு தமிழ் தெரியுமென்றும் குறிப்பிட்டார்.

பிரான்ஸில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது தமிழர் ஒருவர் சற்று நீண்டதாக சில விடயங்களை ஜனாதிபதிக்கு சொல்ல முயன்றார். இலங்கையில் நடந்த இனப்படுகொலை விவகாரத்திலேயே முதல் நடவடிக்கையெடுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

இலங்கையில் அரசாங்கம் ஜனநாயகமானது என்று தான் நம்பவில்லை என்றும் விமர்சித்தார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி தனது பாணியில்,அந்த தமிழர் என்ன கூற முயற்சிக்கின்றார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை எனவும் ஆங்கிலம் தெரியாவிட்டால் தமிழில் பேசுமாறும் கேட்டுக்கொண்டார்.

தனக்கு தமிழ் தெரியும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஆர்வலர் பின்னர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார்,

அதற்கு எந்த பதிலும் அளிக்காத ஜனாதிபதி, இலங்கைக்கு வாங்க என்றார். (ம-7)

## புவிசார் அரசியல் போட்டியில் இலங்கை சிக்குண்டுள்ளது

### நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடந்த இரண்டுதசாப்த காலமாக புவிசார் அரசியல் போட்டியினால் பாதிக்கப்பட்டுள்ளது என பாரா்ளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீனாவின்அரச தொலைக்காட்சியான சிஜிடிஎன்னிற்கு வழங்கிய பேட்டியில் அவர்இதனை தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் நட்புறவை வலுப்படுத்துவது குறித்த இலங்கையின் ஆர்வம் குறித்து நாமல்ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

மக்கள் மத்தியிலான உறவுகளை மீள ஆரம்பிக்கவேண்டிய தருணம் இது என நாங்கள் கருதுகின்றோம் என தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ அரசியல் கட்சிகள் அரசாங்கங்கள் மத்தியிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதுடன் மாத்திரமல்லாமல் பொதுமக்கள் மத்தியிலான உறவுகளையும் வலுப்படுத்தவேண்டும் என தெரிவித்துள்ளார்.

இலங்கையும்சீனாவும் நீண்டகால நண்பர்கள் இதன்காரணமாக இரு நாடுகளிற்கும் நன்மைகள் ஏற்பட்டுள்ளன மிகவும் நெருக்கடியான காலங்களில் சீனா இலங்கைக்கு ஆதரவாக விளங்கியுள்ளது அதேபோன்று சீனா எப்போதும் ஒரு சீன கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் சீனாவிற்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள நாமல் ராஜபக்ஷ வருட இறுதியில் ஜனாதிபதியும் சீனாவிற்கு விஜயம் மேற்கொள்வார் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் ஏனைய மூலோபாய திட்டங்கள் மூலம் இரு நாடுகளிற்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச வல்லரசுகளின் போட்டியில் பல நாடுகள் பக்கம் சாய்வதை தவிர்க்கும் போக்கு அதிகரித்துள்ளமை குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள நாமல்ராஜபக்ஷ நாங்கள் வடக்கு கிழக்கு மேற்கு தெற்கு என்ற புவியியல் வேறுபாடுகள் குறித்து கவனம் செலுத்தக்கூடாது நாடுகளிற்கு இடையில் சர்வதேச அபிவிருத்தி சகாக்கள் மத்தியில் பரஸ்பர நலன்கள் அடிப்படையில் இந்த விடயத்தை அணுகவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கடன்பொறி குறித்த கேள்விக்கு நாமல் ராஜபக்ஷ இது புவிசார் அரசியல் தொடர்பானது துரதிஷ்டவசமாக இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களாக புவிசார் அரசியல் மோதலில் சிக்குண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை மறுசீரமைப் பது குறித்து கருத்து தெரிவித்துவரும் அனேகமான உட்கட்டமைப்புகள் சீனாவின் உதவியுடன் உருவாக்கப்பட்டவை. இது பொறிஎன்றால் முன்வந்து முதலீடு செய்வார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மறவன்புலவு கடற்கரையில் ஜெல் பக்கட்டுக்கள் மீட்பு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன் புலவு கடற்கரையை அண்மித்த மயானப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் தடைசெய்யப்பட்ட sun-90 ஜெல் பக்கெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட Sun-90 என்ற மீன்களை பிடிக்க பயன்படுத்தப்படுகின்ற ஜெல் பக்கெட்டுக்கள் 29இவ்வாறு சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மறவன்புலவு கடற்கரைப் பகுதியில் மீன்பிடிக்க பயன்படுத்தப்படுகின்ற தடைசெய்யப்பட்ட ஜெல் பக்கெட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சாவகச்சேரிப் பொலிஸாரோடு இணைந்து இராணுவத்தினர் தடைசெய்யப்பட்ட பக்கெட்டுக்களை மீட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் எவரும் கைதாகாத நிலையில் மேலதிக விசாரணை களை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## ருமேனியா தூதுவருடன் சபாநாயகர் கலந்துரையாடல்

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ருமேனியாவின் இராஜாங்க செயலாளரும் வெளிவிவகார அமைச்சின் பிரதியமைச்சருமான ட்ரேயன் ஹிரிஸ்டியா (Traian Hristea) தலைமையிலான தூதுக்குழு, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அவர்களை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சந்தித்தது.

இந்தத் தூதுக்குழுவில் ருமேனிய வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் டயானா டேஸ், வெளிவிவகார அமைச்சின் கவுன்சிலர் போக்டன் அல்டியா மற்றும் இலங்கைக்கான ருமேனியத் தூதுவர் கலாநிதி விக்டர் சியுஜ்டியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ருமேனியாவில் இலங்கை தூதரகத்தை அமைக்க எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு இராஜாங்கச் செயலாளர் ட்ரேயன் ஹிரிஸ்டியா இதன் போது பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் இரு நாடுகளுக்கும்இடையில்உறுதியான ஒத்துழைப்புக்களை ஏற்படுத்த இது மிகவும் முக்கியமானது என்றும் தெரிவித்தார். (ம-7)

## ஆவணங்களின்றி சாரத்தியம் மேற்கொண்டவருக்கு சிறை

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றிமோட்டார் சைக்கிள் செலுத்திய பெண் ஒருவருக்கு ஒரு மாத கால சிறை தண்டனை பருத்தித்துறை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி போக்குவரத்து பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று துன்னா [illegible] மதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றியும் தலைக்கவசம் அணியாமலும் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குற்றத்தை சந்தேக நபர் ஒப்புக்கொண்ட நிலையில் ஒரு மாத கால சிறை தண்டனை விதிக்கப்பட்டதுடன் 28000 ரூபா தண்ட பணமும் விதிக்கப்பட்டது. (ம-7)

## விசேட வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 63 ஆக நீடிக்க இணக்கம்

(கொழும்பு)

அரச சேவையில் ஈடுபடும் விசேட வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிக்க சுகாதார. அமைச்சின் செயலாளர் இணங்கியுள்ளதாக சட்டமா அதிபர்மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் அரச சேவையில் ஈடுபடும் விசேட வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக நீடிக்க இணங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இரா.கிருஷ்ணமூர்த்தி கண்டுபிடித்த சங்ககால நாணயங்களில் சில...




### "இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்"

பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் அவர்களால் 2001 இல் வெளியிடப்பட்ட "இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்" என்னும் நூலில் இந்திய நாணயங்களும் இலங்கைத் தமிழர்களும் பிரமி எழுத்துப் பொறித்த தமிழர் நாணயங்கள், பண்டைய காலத்தில் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள், வட இலங்கை அரசு கால நாணயங்கள், நல்லூர் இராசதானி கால நாணயங்கள் போன்ற விடயங்கள் அலசப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை நாணயங்களின் தோற்றம், வளர்ச்சி இந்திய நாணயங்களின் வரலாற்றோடு இணைந்தது என்றும் இலங்கையின் ஆரம்பகால நாணயங்கள் இந்தியாவிலிருந்தே கொண்டு வரப்பட்டவையென்றும் காலப்போக்கில் இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங்கள் கூடப் பெருமளவுக்கு இந்திய நாணய மரபை அடியொற்றித் தோன்றியதென்றும் இதனால் இலங்கை வரலாற்று மூலங்களின் நாணயத்தைச் சுட்டும் பெயர்கள் பலவும் இந்திய நாணயங்களின் பெயர்களோடு ஒற்றுமை கொண்டு காணப்படுவதாவும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது.

வடமொழியில் கார்ஷாபண என்ற சொல் இலங்கைப் பாளி நூல்களில் கஹவன எனவும் கல்வெட்டுகளில் கஹபநெ எனவும் சிங்களத்தில் கஹவனு எனவும் குறிக்கப்பட்டுள்ளதோடு கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முன் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னன் இடிந்துபோன தாது கோபுரத்தை திருத்தியமைக்க 1500 நாணயங்களை (கஹபண) கொடுத்தான் என மகாவம்சம் கூறுவதாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆண்டு காலமாக பேராசிரியர் மேற்கொண்ட கள ஆய்வின் போது கண்டெடுத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதிய கட்டுரைகளும் ஆய்வு நூல்களும் தென்னிந்தியத் தமிழர்கள் போல் இலங்கைத் தமிழர்களும் பண்டு தொட்டு நாணயங்களை வெளியிட்டு வந்துள்ளனர் என்ற புதிய கருத்தைச் சான்றாதாரங்களுடன் கூறுவதாக அமைந்துள்ளன. தாம் இதுவரை ஆய்வுக்கு உட்படுத்திய நாணயங்களை விட எண்ணிக்கையில் அதிகமான பலவகை நாணயங்கள் தமிழ் வரலாற்று ஆர்வலர்களால் வட இலங்கையிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளதாவும் அவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிடுகிறார். அந்நூலில் எண்ணிலடங்கா நாணயங்களின் வடிவங்கள், அவை கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சுருக்கமாகக் கூறின் இலங்கையில் கிடைக்கும் தமிழ் நாணயங்கள் அனைத்தும் இந்திய அரசுகளால் வெளியிடப்பட்டவை என்ற கருத்து தவறானது என்பதை இந்நூல் வெளிக்காட்டுகிறது. இந்நூலை தமிழ் நாணயங்கள் பற்றிய ஆய்வாக மட்டும் கருதாமல் ஈழத்தமிழரின் தொன்மை வரலாற்றை எடுத்துக் காட்டுவதாகவும் கருதமுடியும். இந்நூலில் கூறப்பட்டவை எவையும் இக்கட்டுரையில் அலசப்படவில்லை.

### நானாட்டானில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள்

18.09.2020 அன்று மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சந்திக்கு அருகில் உள்ள வடக்கு வீதி என்ற இடத்தில் வீடு கட்டுவதற்காக குழிகள் வெட்டிய போது ஒரு குழியில் காணப்பட்ட பானையில் இருந்து 1904 நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நாணயங்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் அவர்களின் கருத்துப்படி இந்நாணயங்க



நானாட்டானில் கண்டுபிடிக்கப்பட்ட நாணய வகைகள்

ளின் முன்பக்கத்தில் மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடத்தின் மேல் இடப்பக்கமாக அல்லது வலப்பக்கமாக பார்த்த நிலையில் படுத்திருக்கும் நந்தியின் உருவமும் இதற்கு இரு புறத்திலும் குத்து விளக்கும் நந்தியின் தலைக்கு மேல் பிறைச் சந்திரனும் நாணய விளிம்பை ஒட்டி சிறுபுள்ளிகளும் காணப்படுகின்றன.

நாணயத்தின் பின்பக்கத்தில் பீடத்தின் மேல் கிடையாக அல்லது நேராக இரண்டு மீன் சின்னாங்களும் இவற்றின் இரு புறத்திலும் குத்து விளக்கும் விளிம்பை ஒட்டி பிறைச் சந்திரனும் சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன. ஆயினும் நாணயங்களின், அளவு, நிறை, வடிவமைப்பு, அழகு, தெளிவு என்பவற்றில் வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிவதாகக் கூறுகின்றார்.

இந்நாணயங்களை ஆய்வு செய்த நாணயவியல் அறிஞர்களில் ஒரு சாரார் நாணயங்களில் மீன் சின்னங்கள் காணப்படுவதால் இவை பாண்டியரால் வெளியிடப்பட்டு தமிழகத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.

இன்னொரு சாரார் இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளமாக இந்நாணயங்களை வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுகின்றனர். வேறு சிலர் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்கள் சமகாலத்தில் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் இருந்து சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பதால் இவற்றைப் பாண்டியர் வடஇலங்கைக்கென வெளியிடப்பட்ட தனித்துவமான நாணயங்கள் எனக் கருதுகின்றனர். அத்தனித்துவம் பாண்டியருக்குரியதல்ல. மாறாக இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காணப்படும் தனித்துவமான அம்சமாகப் பார்ப்பதே பொருத்தம் என்ற கருத்தும் ஆய்வாளர்களால் வைக்கப்படுகின்றது.

இலங்கையில் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றுவதற்கு இந்தியத் தொடர்பு முக்கிய காரணமாக இருந்தாலும் பண்டுதொட்டு இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன.

சமகாலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட சதுர நாணயங்களின் முன்பக்கத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் உள்ளதைப் போன்ற காளை உருவம் இடம்பெற்றாலும் நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரின் மீன் சின்னத்திற்குப் பதிலாக ஒரு வட்டமும் வட்டத்திற்குள் மூன்று அல்லது நான்கு சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன. இச்சின்னாங்களே சற்றுப் பிற்பட்ட காலத்தில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களின் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன.

ஆனால் நாணயங்களின் முன்பக்கத்தில் காளைக்குப் பதிலாக சிங்கள மன்னர் வெளியிட்ட நாணயங்களில் சிங்கம் முக்கிய இலட்சனையாக இடம்பெற்றுள்ளது. இவற்றில் இருந்து சிங்கள மன்னர்கள் சிங்கத்தையும் தமிழர்கள் காளையையும் (நந்தி) தமது அரச இலட்சனையாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். இம்மரபு பிற்காலத்திலும் தொடர்ந்துள்ளது.

நானாட்டனிலும் வடஇலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களை யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடியாக வடஇலங்கையில் நந்தியை அரச இலட்சனையாகக் கொண்டு ஆட்சி புரிந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டவை எனக் கூறுவதே பொருத்தமாகும் என்று பேராசிரியர் கூறுகின்றார்.

பொதுவாக வட இலங்கையில் காணப்பட்ட நாணயங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை உள்நாட்டில் அச்சிடப்பட்டவை மற்றும் அவர்களின் வர்த்தக பங்காளிகளுடன் வணிக அல்லது கலாசார தொடர்புகள் மூலம் பெறப்பட்டவை ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரவதையால்...

களால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

சித்திரவதைகளிலிருந்து விலக்கீடு பெறுதல் என்பது எந்தவொரு சூழ்நிலையிலும் மட்டுப்படுத்தப்பட முடியாத மனித உரிமையாகும்.

இருப்பினும் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் உளவியல் மற்றும் உடலியல் ரீதியான சித்திரவதைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்த மிகமோசமான மனித உரிமை மீறலின் பாரதூரமான பின்விளைவுகளை சித்திரவதைக்கு உள்ளான தரப்பினர் மாத்திரமன்றி, அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்களும் அனுபவிக்கவேண்டியுள்ளது.

எனவே சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தில் (நேற்று முன்தினம்) மேற்குறிப்பிட்டவாறு பாதிக்கப்பட்ட தரப்பினர், அவர்களது குடும்பத்தினர் மற்றும் சாட்சியங்களுக்கு அவசியமான ஆதரவு அனைத்து வழிகளிலும் வழங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டுமென மீளவலியுறுத்துகின்றோம்.

நாம் எமது விசாரணை செயன்முறையின் ஊடாக எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பின்ருக்கான நியாயத்தையும் இழப்பீட்டையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முஸ்லிம்...

த்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் நாளை மறுதினம் ஜூன் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் குறித்த தினத்துக்கான பாடசாலை நடவடிக்கையை எதிர்வரும் ஜூலை 8ஆம் திகதி சனிக்கிழமை முன்னெடுக்குமாறும் கல்வி அமைச்சு நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அதிகளவான...

படைக்கப்பட்டது.

இது தொடர்பில் மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் அதிகளவான போதைப் பயன்பாடே மரணத்துக்குக் காரணம் என அறிக்கையிட்டார். (ம-7)

## பாகுபாடின்றி...

மேம்படுத்துவதுடன் அவர்களது சமூக முன்னேற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள அரசியல் தலைவர்களும் மக்களும் அரசியலமைப்பில் உள்ள அதிகார பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்றனர்.

அரசியலமைப்பில் உள்ள விடயங்கள் தற்போதும் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளன. அந்த விடயத்தில் அரசாங்கம் எந்த விதத்திலும் தலையிடப் போவதில்லை.

அதற்கான உத்தரவாதமும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய சில அதிகாரங்களும் கோரப்படுகின்ற நிலையில் அந்த விடயம் குறித்து கலந்துரையாடப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## வடக்கு மாகாண...

அதிகார பரவலாக்கம் குறித்து தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை சாதகமான முறையில் அணுகுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஜெனிவா கூட்டத் தொடரிலும் இவ் ஆணைக்குழுவின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கை தெளிவுபடுத்தியுள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் அந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஓகஸ்டில் இந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

குறிப்பாக தமிழ் அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வு குறித்தும் அதிகார பரவலாக்கம் குறித்தும் கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த கோரிக்கைகளை சாதகமான முறையில் அணுகுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

எவ்வாறாயினும் ஏற்கெனவே நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் மாகாண சபைக்கு குறிப்பிட்டளவு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வட்க்கை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் அரசியல் தலைவர்கள் மேலும் சில அதிகாரங்களைக் கோருகின்றனர்.

வடக்கு மாகாண சபைக்கு மாத்திரமல்லாது நாட்டிலுள்ள ஏனைய மாகாண சபைகளும் உள்ளடங்கலாக மேலதிக அதிகார பரவலாக்கம் குறித்தும் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகிறது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வங்கி வைப்...

எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் உட்பட எந்தவொரு பொது நிதியின் அங்கத்துவ மிகுதியில் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும், கடந்த காலங்களில் செலுத்தப்பட்ட உயர் ஓய்வூதிய நிதிய விகிதத்தையும் எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பானது நாட்டின் வங்கிக் கட்டமைப்பு அல்லது எந்தவொரு அரச அல்லது தனியார் வங்கியின் ஸ்திரத்தன்மையையும் பாதிக்காது. நாட்டில் உள்ள 50 மில்லியனுக்கும் அதிகமான வங்கி வைப்பாளர்களின் வைப்புத் தொகைக்கு எதுவித பாதிப்பும் ஏழாது என்றும், தற்போது வங்கி வைப்புத் தொகைக்கு செலுத்தப்படும் வட்டியையும் அது பாதிக்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெளிநாட்டு மற்றும்உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகள் இன்று விசேட அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த அரச கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 83,700 மில்லியன் டொலர்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.3% விகிதம் என ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

2022ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை 41,500 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.6% ஆகும். அப்போது மொத்த உள்நாட்டுக் கடன் தொகை 42,100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 64.6% ஆகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார். (ம-7)

## வங்கிச் சட்டத்தில்...

தில் கொண்டு 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தை திருத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதன்படி, அடையாளம் காணப்பட்ட திருத்தங்கள் உட்பட தொடர்புடைய வங்கிச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்ட வரைவை உருவாக்குவதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1613
வெற்றி இலக்கங்கள்
துலாம் 7 0 8 6 4 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1188
N 45 49 70 71
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2023.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 3400
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
T 25 49 53 62
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1506
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
A 12 12 14 73 77

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 467
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 20 29 40 59 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/27
சீட்டிழுப்பு இலக்கம் 5158
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
F 0 0 9 2 3 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2132 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.06.27 | தினம் செவ்வாய்க்கிழமை
B 08 24 29 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,793,100/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.06.27
வெற்றி வாரம்: 4293
வர்ணம்: பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,105,913.10
வெற்றி இலக்கங்கள்
32 38 53 63
ஆங்கில எழுத்து U
DLB

சசிரி
வெற்றி வாரம் 342
சீட்டிழுப்பு திகதி 2023.06.27
ஊதா
வெற்றி இலக்கங்கள் 10 14 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,151,360/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,204,174.60
திகதி 2023-06-27
வெற்றி வாரம் 3844
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 01 26 32 57
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,810,740/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 22 12 33 45 52
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 341,326,247.80
1308
2023.06.27 செவ்வாய்
DLB DEVELOPMENT LOTTERIES

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 1958
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.06.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.53,729,304.60
வெற்றி இலக்கங்கள் 04 45 55 76
ஆங்கில எழுத்து N
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுடன் 6 மாதங்களைப் பூர்த்தி செய்யும் **Pearl Island Inn** (பேர்ல் ஐலண்ட் இன்)
தனது வாடிக்கையாளர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.
இதனை முன்னிட்டு வாடிக்கையாளர்களை மேலும் திருப்திப்படுத்த எதிர்வரும் ஜூலை 1 & 2 ஆம் திகதிகளில் விஷேட விலைக்கழிவுடன் கூடிய உணவுக் கொண்டாட்ட தினத்தை ஏற்பாடு செய்கிறது.

PEARL ISLAND Inn
Restaurant
Cool Bar

**Pearl Special Bite**
Mutton, Chicken, Prawns, Cuttlefish, Fish & Veg of the day
Rs 3000

**Happy Fiesta**
3 Heineken 625ml Chicken Devil, Onion Pakoda
Rs. 2200

**Kottu Fiesta**
Buy any Kind of 3 Kottu & get a Mega Coke Free

**July 01 முதல் 10 வரை**
Single Room - 6,000/=
Double Room - 7,000/=
Three bed Room - 8,000/=
15% OFF

உங்கள் அனைவரையும்
வருக வருக என வரவேற்கிறது
பேர்ல் ஐலண்ட் இன்....

Pearl Island Inn
Tourist Hotel & Restaurant
077 002 2088
603, Hospital Road, Jaffna.
*(Near to Vembady Junction)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
உரிமையாளர் சுவிஸ் சிகரம் (சேகர்) (C-6827)


# மரண அறிவித்தல்

மலர்வு 11 - 06 - 1931



உதிர்வு 25 - 06 - 2023

## திருமதி.குணசிங்கம் சிந்தாமணி
### (இளைப்பாறிய அதிபர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 85/17 ஏ.வி வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணசிங்கம் சிந்தாமணி அவர்கள் 25.06.2023 இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-மீனாட்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு-செங்கமலம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும், வையித்திலிங்கம் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரவேலு தங்கம்மா, காலஞ்சென்ற நடேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும் , மங்கயர்க்கரசி(கனடா), இந்துமதி(கனடா), காலஞ்சென்ற லலிதாமதி, தேவராசன்(கனடா), இளங்குகராசன்(நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன், சண்முக சுந்தரம், ஹனிஸா, பானு ஆகியோரின் அன்பு மாமியாரும், தனராஜ், செந்தூர்ராஜ், தசலக்சன், பிரியதர்சன் விமலதர்சனா, பிரதீபா, சரண்யா, சசிராஜ், ரமண்ராஜ், தனயன், தனுசன், தகயவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டிஷான், ஷகிரா, ஹர்சித், பிரிசன், ரோகித், ராணியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.06.2023 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

(16107)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16119)
076 825 7716 (ஆகாஸ்)

**காணி விற்பனைக்கு**
மாதகல் ஞான சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் (வன்னியர்) அருகில் அமைந்துள்ள 13 பரப்பு பனைகளுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு
தரகர் தேவையில்லை
074 020 6158
(16066)

**வேலையாட்கள் தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு
கொத்து,றைஸ் உதவியாளர்கள் உடன் தேவை.
தங்குமிடம், உணவு இலவசம்
077 629 0894
072 629 0891
(16108)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-6828)

**உடனடி வேலைவாய்ப்பு**
சமையல் உதவியாளர்கள்
வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.
• முன் அனுபவம் விரும்பத்தக்கது.
• ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம்: 50,000
(C-6828)
CIMS 49A, CHAPEL STREET, JAFFNA
777-068-777

**KBK கணக்கீட்டு கல்லூரி**
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.
பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2025
(தமிழ்/ ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்)
இரு இடங்களிலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன
ACCOUNTING
MR.K.BALAKAJEN SLTS
B.Com(jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in Edu (OUSL)
M.Com(Hons), ACC.Spl
A/L 2023, A/L 2024 பிரிவுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (16090)
077 452 0043 (Whatsapp)

**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.